திரு. எஸ்.எஸ். ராமசுப்பு: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தச் சாலையை எடுத்துக் கொள்ளலாம் என்று சொன்னதால் எங்களுடைய பகுதி மக்கள் மிகவும் மகிழ்ச்சியடைவார்கள். ஏனென்றால் அந்தச் சாலையானது இரண்டு கிராமங்களுக்குச் செல்லக்கூடிய சாலை: நாராணம்மாள், மாயமான்குறிச்சி என்ற இரண்டு கிராமங்கள் அதில் அடங்கியிருக்கின்றன. அந்த கிராமத்திற்கு செல்லும் சாலையை சரியாகப் போடாததால், பழுதடைந்திருப்பதால், பஸ்கள் எல்லாம் நிறுத்தப்பட்டிருக்கின்றது. இன்றைக்கு அந்தச் சாலை போடப்படும் என்று சொன்னதால் மிக்க மகிழ்ச்சி அடைகிறோம். அதே சமயத்தில் இரண்டு பகுதிகளிலும் வயல்கள் இருக்கின்றன. அந்த வயல் பகுதியில் உள்ளவர்கள் அந்த ரோட்டை ஆக்கிரமிப்பு செய்து கொள்கின்றார்கள். அவ்வாறு ஆக்கிரமிப்பு செய்வதை தடுப்பதற்கு அந்தச் சாலையை கொஞ்சம் அகலப்படுத்தி போட்டு, அந்த ஆக்கிரமிப்பு செய்பவர்கள் மீதும் நடவடிக்கை எடுப்பதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் அந்தச் சாலையை சீக்கிரமாகப் போடுவதற்கு அரசு முன்வருமா என்ற கேள்வியையும் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கண்ட வினாவிலே குறிப்பிடப்படுகின்ற சாலை 1991—92 ஆம் ஆண்டு சிறப்பு தன்னிறைவுத் திட்டத்தில் பேருந்து தடச்சாலைகள் பட்டியலில் சேர்க்கப்பட்டு உத்திரவிடப்பட்டிருக்கிறது. 18—3—1992 அன்று டெண்டர் கோரப்பட்டு இன்றைக்கு வொர்க் ஆர்டர்—அந்த வேலையைச் சீக்கிரமாக எடுத்துச் செய்வதற்காக அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆக்கிரமிப்புகளை பொறுத்த மட்டிலே இன்றைக்கு வயல்களின் ஊடே சாலை செல்லுகின்ற நேரத்திலே சில இடங்களிலே அந்தப் பிரச்சினை ஏற்படுகிறது. ஆகவே, எந்த அளவிற்கு ஏற்கனவே இடங்களை எடுத்திருக்கிறோம் என்பதை கணக்கிலே வைத்து போக்குவரத்துக்கு இடையூறு இல்லாத வகையில் அந்த ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு இந்தச் சாலையினுடைய பணி மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 507, திரு. பே. தர்மலிங்கம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

1992 ஏப்ரல் 8]

507—

திருநெல்வேலி மத்தியப் பேருந்து நிலையத்தை மாற்றுதல்.

*1319 திரு. பே. தர்மலிங்கம் :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி நகர போக்குவரத்து நெரிசலை சீர் செய்யவும், பயணிகளின் நலனைக் கருதியும் திருநெல்வேலி மத்திய பேருந்து நிலயத்தை பாளையங்கோட்டைக்கு மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா.

(ஆ) ஆம் எனில், எப்போதிலிருந்து மாற்றப்படும் ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : திருநெல்வேலி நகர பேருந்து நிலையத்தை மாற்றுவது சம்பந்தமாக அரசு ஆய்வு செய்து தற்போது உள்ள இடத்திலிருந்து மாற்றத் தேவையில்லை என அரசு முடிவெடுத்துள்ளது.

திரு. பே. தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான பாளையங்கோட்டை மேலப்பாளையம் மக்களின் நீண்ட நாள் எண்ணத்தை நிறைவேற்றும் வகையில் திருநெல்வேலியோடு இணைந்த எனது தொகுதிக்கு நடப்பு ஆண்டிலே மாநகராட்சி அந்தஸ்தை வழங்கிய பாரி வள்ளல் நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது சார்பிலும் தொகுதி மக்கள் சார்பிலும் நன்றியை அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பித்து தற்போது நெல்லை சந்திப்பு பஸ் நிலையத்திற்கு 820 பஸ்கள் வந்து போவதாலும், குறிப்பாக டவுன் பஸ்கள், வெளியூர் பஸ்கள், வெகுதூரம் செல்லும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பஸ்கள் எல்லாம் ஒரே இடத்திலே வந்து செல்வதாலும் பஸ் நிலையத்தை விரிவு படுத்திட போதிய இட வசதி இல்லாத காரணத்தாலும் கடந்த தி.மு.க. ஆட்சி நடந்த போது நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் பாளையங்கோட்டையிலுள்ள வேந்தன்குளம் என்ற இடத்தில் பேருந்து நிலையம் அமைப்பதற்கு பரிந்துரை செய்து நிதி ஒதுக்கீடு செய்து அன்றைய தி.மு.க. ஆட்சியால் கிடப்பில் போடப்பட்டது. ஆகவே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் நல்லாட்சியில் மாண்புமிகு உளளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் பாளையங்கோட்டை வேந்தன்குளம் என்ற இடத்திலே புதிய புஸ் நிலையம் அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில் பாளையங்கோட்டை வேந்தன்குளம் என்ற இடத்திலே ஒரு புதிய பேருந்து நிலையம் அமைப்பது பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பே. தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைக் கூறி, வேலைப் பளு காரணமாக நகராட்சிப் பணியாளர்கள் பஸ் நிலையங்களை சரியாக பராமரிக்க இயலவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? எனவே, அதை சரியாகப் பராமரிக்கும் வகையில் இதற்காக தனியாக அதிகாரிகளைப் போட்டு பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற பேருந்து நிலையங்களை நிர்வகிக்கின்ற முறைகளில் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் வந்து இருக்கின்ற காரணத்தால் பேருந்து நிலையங்களை நிர்வகிக்கின்ற பொறுப்புகளை பொறியாளர்கள் அல்லது மருத்துவ பட்டதாரிகளைக் கொண்டு புதிய முறையில் பேருந்து நிலையங்களை நிர்வகிக்கின்ற பொறுப்புகளுக்கு தனி அதிகாரிகளை நியமிப்பது பற்றி தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. டி. வேலையா.

திரு. டி. வேலையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தில் உள்ள 234 தொகுதிகளையும் தன்னுடைய தொகுதி என்று சொல்லி ஒவ்வொரு தொகுதிக்கும் ஏதாவது புதிய நன்மைகளைச் செய்துகொண்டு வருகிறார்கள். இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன திருநெல்வேலி மத்திய பேருந்து நிலையம் என்னுடைய தொகுதியில் இருக்கிறது. இதை இந்தத் தொகுதியிலிருந்து மற்ற தொகுதிக்கு மாற்றினால் நான் அந்தத் தொகுதியிலிருந்த பேருந்து நிலையத்தை கோட்டைவிட்டு விட்டேன் என்று மக்கள் என்னை பழி சுற்றுவார்கள். வளர்ந்து வருகிற காலத்தில் புதிய பேருந்து நிலையம் தேவையென்றால் பாளையங்கோட்டைப் பகுதியில் தனியாக ஒரு பேருந்து நிலையத்தை அமைத்துக்கொள்ளலாம். ஆகவே, வருகின்ற காலத்தில் எல்லா தொகுதிக்கும் எல்லாம் செய்து கொடுக்க வேண்டு

மென்று எண்ணுகின்ற டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலததில் ஒரு இடத்தில் இருப்பதை இனனொரு இடத்திற்கு மாற்றவேண்டாம் என்ற கருத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மனதில் கொள்வார்களா என்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலியில் இருக்கின்ற பேருந்து நிலையத்தை எக்காரணத்தைக் கொண்டும் இந்த அரசு மாற்றாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். புதிதாக வளர்ந்து வருகின்ற நிலைமைக்கு ஏற்ப பாளையங்கோட்டை வேந்தன்குளம் என்ற இடத்தில் புதியதாக ஒரு பேருந்து நிலையம் அமைப்பது பற்றிதான் அரசு பரிசீலிக்கும் என்று சொல்லியிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 508, டாக்டர் ஜி.ஆர். மாலா, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

508—

தானாகவே முன்வந்து பணி ஓய்வு பெறும் அரசு ஊழியர்களின் வாரிசுகளுக்கு வேலைவாய்ப்பு.

*2468 டாக்டர் ஜி.ஆர். மாலா :

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மாநில அரசு ஊழியர்கள் பணியிலிருக்கும்போது இறந்து போனால் அவர்களின் வாரிசுகளுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதைப் போல், தானாகவே முன வந்து பணி ஓய்வு பெறும் Vo untary retirement) அரசு ஊழியர்களின் வாரிசுகளுக்கும் வேலைவாய்ப்பு அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசு ஊழியர்கள் பணியிலிருக்கும்போது இறந்து போனால் அவர்களின் வாரிசுதாரர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதைப் போல் தானாகவே முன் வந்து பணி ஓய்வு பெறும் அரசு ஊழியர்களின் வாரிசுகளுக்கும் வேலைவாய்ப்பு அளிக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

டாக்டர் ஜி. ஆர். மாலா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்கள் பல்வேறு காரணங்களால் வாலண்டரி ரிடையர்மெண்ட் பெறுகிறார்கள். என்ன காரணம் என்பதை அறிந்து உடல் நலம் பாதிக்கப்படுவதால் காரணமாக Ischaemic Heart Disease, Cancer, Renal problem